# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் அரசு உயர்நிலைப்பள்ளிகளில் நன்றாக கல்வி பயிலும் 150 மாணவ, மாணவியர்களை தேர்வு செய்து சுற்றுலாத்துறையின் சார்பில் **பள்ளி மாணவ, மாணவியர்களின் ஒரு நாள் விழிப்புணர்வு சுற்றுலா** அழைத்து செல்லப்பட்டது.

இச்சுற்றுலாவை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் **முனைவர்.அ.புகழேந்தி** அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இச்சுற்றுலாவில், உலக புகழ்பெற்ற, கங்கைகொண்ட சோழபுரம் அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோவில், தஞ்சாவூர் பெரியக்கோவில், தஞ்சாவூர் அரண்மனை மற்றும் தாராசுரம் ஐராதீஸ்வரர் திருக்கோவில் போன்ற கலைநயமிக்க இடங்களுக்கு அழைத்து செல்லப்பட்டது.

இச்சுற்றுலாவில், மாணவர்களிடையே சுற்றுலாத்தளங்கள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த வினாடி-வினா நிகழ்ச்சி நடத்தப்பட்டு, அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

மேலும், சுற்றுலாவில் கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சுற்றுலாத்துறையின் சார்பாக புத்தகப்பைகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இச்சுற்றுலாவில், தஞ்சாவூர் மாவட்ட சுற்றுலா அலுவலர் இரா.ராஜசேகரன், அரியலூர் மாவட்ட உதவி சுற்றுலா அலுவலர் ரா.கார்த்திக் மற்றும் பள்ளி தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.